REPORTING SEC
(Council)

தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

வியாழக் கிழமை, 1984, பிப்ரவரி, 16.

(மாசி 4, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு 2014.)

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் முற்பகல் 9-30 மணியளவில், மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினா எண்கள் 21-ம், 22-ம் ஒத்தி வைக்கப்படுகின்றன.

Avvayaramman Temple.

* 23. *Q.*—Thiru E. S. VENKATESAN: Will the Hon the Minister for Information and Religious Endowments be pleased to state, whether there is any proposal by the Hindu Religious and Charitable Endowments Department to take over the Avvayaramman (ஔவைய்யாரம்மன்) Temple in Kanyakumari district?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை வட்டம், செண்பகராமன்புதூர் கிராமம், தாழக்குடி அஞ்சல், ஆதிச்சன்புதூரில் உள்ள அருள்மிகு ஔவையாரம்மன் திருக்கோவில் இந்து சமய அறநிலைய சட்டப் (தமிழ்நாடு சட்டம் 22/1959) பிரிவுகள் 92 (1) மற்றும் 92 (2) இவற்றின் கீழ் முறையே உதவித் தொகை, தணிக்கை தொகை இவை மட்டும் 1961-ம் ஆண்டு முதல் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

திருநெல்வேலி இந்து சமய அறநிலைய (ஆட்சித்) துறை துணை ஆணையர் 3—7—1964-ல் திரு. பத்மநாப பிள்ளை என்பவரை பரம்பரை அறங்காவலராக நியமனம் செய்தார். 1967 முதல் திரு. பத்மநாப பிள்ளையின் வாரிசு யார் என்பது குறித்து ஒரு வழக்கு நாகர்கோவில் சப்-கோர்ட்டில் நிலுவையில் உள்ளது. 14—8—1976 முதல் இத்திருக்கோயில் சப்-கோர்ட் நியமித்த வழக்கறிஞரான ரிசீவர் ஒருவரின் மேற்பார்வையில் உள்ளது.

[1984 பிப்ரவரி 16

நவம்பர் 1982 முதல் இந்து அறநிலைய (ஆட்சித்) துறை பூதபாண்டி ஆய்வாளர் இத்திருக்கோயிலுக்கு தக்காராக நியமனம் செய்யப்பட்டும், ஆலயப் பொறுப்புகளை ஆய்வரிடம் ஒப்படைப்பதை ஆட்சேபித்து 1982 முதல் ஒரு வழக்கும் நாகர்கோவில் மாவட்ட முன்சீப் கோர்ட்டில் நிலுவையில் உள்ளது.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது போன்ற கோயில்கள் தமிழகத்தில் வேறு எங்கும் கிடையாது. ஔவையாருக்கு அந்த ஒரு இடத்தில் மட்டும் கோயில் இருக்கிறது. ஆகவே இந்தக் கோயிலுக்கு அரசு மானியம் ஏதும் கொடுக்குமா? அல்லது அரசே அந்தக் கோயிலை ஏற்று, சிறந்த முறையில் பராமரிக்க ஏதும் திட்டமுள்ளதா?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கோயிலை நானே நேரில் பார்வையிட்டேன். இப்படிப்பட்ட தொன்மையான, வரலாற்றுச் சிறப்பு மிக்க ஆலயங்களை அறநிலையத் துறையே எடுத்துக்கொண்டு, அதற்கு நல்ல சிறப்புக்களையெல்லாம் சேர்க்க வேண்டுமென்று முனைகிறபோது, இப்படிப்பட்ட தடைகள் ஏற்படுத்தப்படுகின்றன. பரம்பரை அறங்காவலர்கள் என்ற பெயரால் இப்படி சிலர் தடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படி அதில் அரசாங்கம் நுழைய விடாதபடி வழக்கு மன்றத்திற்குச் சென்று, அந்த வழக்குகள் நீண்ட காலமாக நிலுவையில் இருந்து வருகின்றன. வழக்கு மன்றத்தின் முடிவு பெறாத சூழ்நிலையில் அரசு அதற்குள்ளே தலையிட்டு, அந்தக் கோயிலின் வளர்ச்சிக்கோ, சிறப்புக்கோ காரியங்களைச் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ஈ. எஸ். வெங்கடேசன் : தலைவர் அவர்களே, இப்போதுள்ள அந்த ஔவையார் கோயிலுக்கு தனிப்பட்ட சொத்துக்கள் ஏதும் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, அந்தக் கோயிலுக்கு மிகப்பெரிய சொத்துக்கள் இருப்பதாகத் தெரியவில்லை. தாழக்குடி கிராமத்தில் புஞ்சை 6 செண்ட்டும், நஞ்சை 85.5 ஹெக்டேரும் உள்ளது. அதை ஆண்டுக் குத்தகைக்கு விட்டு நாற்பது கோட்டை நெல் வருகிறது. புஞ்சை நிலத்தை குத்தகைக்கு விடவில்லை. 13 மாங்கன் உள்ளன.

REPORTING SECT
(Council)

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, இதுபோன்ற தமிழ்ப் புலவர்கள் வேறு யாருக்கும் வேறு எங்கும் கோயில்கள் இருக்கின்றனவா ? அப்படியுள்ள கோயில்களில் அவர்களது பாடல்கள் எழுதி வைக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : தலைவர் அவர்களே, ஔவை யாருக்கு இன்னொரு இடத்தில் கோயில் இருப்பதாகத் தெரிகிறது. ஆனால் அதற்கான விபரம் இப்போது என்னிடத்தில் இல்லை. இப்படிப்பட்ட கோயில்களை அரசுப் பொறுப்பில் எடுத்துக்கொண்டால்தான், நாம் நினைக்கிறபடி, தமிழ் மூதாட்டியின் நினைவுகள் நிலைத்து நிற்கும்படி செய்ய முடியும்.

தந்தத்துக்காக யானைகளைக் கொல்லுதல்.

*24 வினா.—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. ம. சங்கரலிங்கம் சார்பில்) : மாண்புமிகு செய்தி அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தமிழ்நாட்டின் மலைப்பகுதியில் வாழும் யானைகளை, பிற மாநிலத்தைச் சார்ந்தவர்கள் சட்ட விரோதமாகக் கொன்று, தந்தம் எடுத்துச் செல்கிறார்கள் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், கடந்த மூன்று வருடங்களில் இது தொடர்பாக எத்தனை வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன ?

மாண்புமிகு திரு. இராம. வீரப்பன் : (அ) பிறமாநிலத்தவர்களும் குற்றங்களில் ஈடுபட்ட செய்தி அரசுக்குக் கிடைத்துள்ளது.

(இ) நான்கு.

டாக்டர் இரா. சனார்த்தனம் : தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது யானைகள் எவ்வளவு இருக்கின்றன என்று கணக்கு இருக்கிறதா ? யானைகளைத் தந்தங்களுக்காக கொலை செய்பவர்களைக் கண்டுபிடிக்க தனிக் காவல் பிரிவு ஏற்படுத்துவது உதவியாக இருக்குமா ?